


## இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில்,

# ரூ.7.39 கோடியில் மருத்துவ உபகரணங்கள் - 108 அவசரகால ஊர்தி சேவையை- மேம்படுத்த வாட்ஸ்அப் செயலி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிமுகம் செய்தார்!

சென்னை, மார்ச்.7

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் (05.03.2026) அன்று சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில், ரூ.7.39 கோடி மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்து, JMMC Medicine எனப்படும் மருத்துவ இதழை தொடங்கி வைத்து, ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி மற்றும் திருவாரூர் மாவட்டங்களுக்கு இரண்டு பல்நோக்கு நடமாடும் கண் மருத்துவ பிரிவை தொடங்கி வைத்து, 108 அவசரகால ஊர்தி சேவையை மேம்படுத்த வாட்ஸ்அப் (Whatsapp Chatbot) செயலியை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். பின்னர் அமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கடலூரை சேர்ந்த 14 வயது மருத்துவ பயனாளிக்கு ரூ.20 இலட்சம் செலவாகக் கூடிய Neuro Modulation Therapy எனும் அரியவகை சிகிச்சை கட்டணமில்லாமல் தக்க நேரத்தில் சென்னை, இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டது.



இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண்தம்புராஜ், தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் மரு. வினித், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.சாந்தாராமன், மாநில பார்வை இழப்பு தடுப்பு சங்கத்தின் திட்ட இயக்குநர் மரு.சந்திரகுமார், சென்னை மருத்துவக் கல்லூரி நரம்பியல் அறுவை சிகிச்சை துறை இயக்குநர் மரு.ராகவேந்திரா, சிறுநீரகவியல் துறை பேராசிரியர் மரு.எழில் சுந்தர், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உடனிருந்தனர்.



சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அனைவரையும் வாழ வைக்கும் தமிழ்நாடு! ஆதவனை பாராட்டும் வடநாடு! எனும் தலைப்பில் அமைச்சர் பி.கே.சேகர் பாபு முன்னிலையில் 5வது மண்டலக் குழு தலைவர் – மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் பி.ஸ்ரீராமுலு தலைமையில் சிறுபான்மையினர் ஆணையம் முன்னாள் உறுப்பினர் ஸ்ரீ ஜெயின், மகா சங் தலைவர் பியாரிலால் ஜெயின், அகில இந்திய மகளிர் மன்ற தமிழ்நாடு மற்றும் கேரள மாநில பொறுப்பாளர் சென்னை கீழ்ப்பாக்கம் மகளிர் அணியின் தலைமை ஆலோசகர் மாலா ஜெயின் ஆகியோர் 1001 வட இந்தியர்களுக்கு நல உதவிகளை வழங்கி சிறப்பித்தனர். இதில் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## அம்பத்தூர் மண்டலம் தாங்கல் ஏரி பூங்காவில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் படகு குழாம்!

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்!

## மக்களுக்கு மிகச்சிறந்த பொழுது போக்குத் தளமாக அமைந்துள்ளது!

சென்னை,மார்ச்.6-

பெருநகர சென்னை மாநகராட்சி அம்பத்தூர் மண்டலம், வார்டு83, மதனங்குப்பம் பிரதான சாலை, கள்ளிக்குப்பம் தாங்கல் ஏரி பூங்காவில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள படகு குழாம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.03.2026 அன்று மக்கள் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைக்கப்பட்டது.







இந்த தாங்கல் ஏரியானது 64,749 சதுர மீட்டர் பரப்பளவிலான இடத்தில் 47,434 சதுர மீட்டர் பரப்பளவில் 15 அடி ஆழத்தில் அமைந்துள்ளது. இந்த ஏரி 21,68,68,248 லிட்டர் நீர் சேமிப்பு கொள்ளளவு கொண்டது. இதில் 1168 மீ நீளத்தில் சுற்றுச்சுவர், 3582 சதுர மீட்டர் நடைபாதை, 8853 சதுர மீட்டர் பரப்பளவில் பசுமைப் பகுதி, 4376 சதுர அடி பரப்பளவில் திறந்தவெளி மற்றும் விளையாட்டுப் பகுதி, 490 சதுர மீட்டர் பரப்பளவில் பெண்கள் உடற்பயிற்சி மற்றும் யோகா செய்வதற்கான பகுதி, வாசிப்புப் பகுதி ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஏரியில் படகு குழாமில் 2 படகுத் துறைகள், 4 மிதிவண்டி படகுகள், 2 மீட்புப் படகுகள், 40 உயிர் காப்புச் சட்டைகள், 28 பூங்கா மேசைகள், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 10 கழிப்பறைகள், 7 எண்ணிக்கையில் தண்ணீர் உள்ளேறும் குழாய், 2 எண்ணிக்கையில் தண்ணீர் வெளியேறும் குழாய், 12 மீட்டர் உயரம் கொண்ட 1 உயர்கோபுர மின்விளக்கு, 16 மீட்டர் உயரம் கொண்ட 1 உயர்கோபுர மின்விளக்கு, 37 எண்ணிக்கையில் தெரு மின் விளக்குகள் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஏரியில் அமைக்கப்பட்டுள்ள படகு குழாம் பொதுமக்களுக்கு மிகச்சிறந்த பொழுதுப்போக்கு தளமாக அமைந்துள்ளது.



காஞ்சிபுரம் மாநகராட்சி 18 வது வட்டத்தில் பாக எண்.160–இல் ‘வெல்லும் தமிழ் பெண்கள்’ ஸ்டாலின் மகளிர் படை வீடு வீடாகச் சென்று கழக அரசின் சாதனைகளை விளக்கி மாமன்ற உறுப்பினர் திருமதி. மல்லிகா ராமகிருஷ்ணன் தலைமையில் வாக்கு சேகரித்தனர். உடன் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ்.ராமகிருஷ்ணன், வட்ட செயலாளர் மண்டி சம்பத், மகாதேவன், மாவு ரமேஷ், சுப்பிரமணி, அருள் ஷா, மகளிர் அணி திருமதி. விஜயா புருஷோத்தமன், திருமதி.கீதா மயில்வாகனன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இருந்தனர்.